1. எல்லையிலும், கடற்கரைகளிலும் வைத்திருந்த பாதுகாப்புகளை பலப்படுத்தியது; வெடிமருந்து செய்யும் சாலைகளை அதிகப்படுத்தி, வெடிமருந்து ஏராளமாய்ச் செய்தது; எதிரியை, வருமுன் தடுக்க, மேற்கு ஸமுத்திரத்தில், பிரிடிஷ் கடற்படையோடு, இந்தியக் கடற்படையைச்சேர்த்து காவல் போட்டது; கீழ் மத்திய தேசங்களி (Asia Minor)ல் எதிரியை மறிக்க இந்தியப் படைகளை நிறுத்தியது: ஆகிய இப்பேற்பட்ட தற்காப்பு ஏற்பாடுகள் ஒன்று.

2. மற்றொன்று, பிரிடனுக்கு வேண்டிய ஆகாரப் பொருள்களையும், இதர விளைபொருள்களையும் ஏராளமாகச் சேகரித்து வேண்டியவாறு, ஏற்றுமதிசெய்வது.

இதாலி சேர்ந்ததிலிருந்து மகத்தான ஆபத்து நம்முடைய காலடியிலேயே வந்து விட்டதால், இனி, பலசரக்குக்கடை வைத்து விளைபொருள்களை பிரிடனுக்கு அனுப்பினல் மட்டும் போதாது ; சண்டையிலும் சேரவேண்டும்.

இதுவிஷயத்தில் இந்திய கவர்ன்மெண்டார் ஏதோ சிரத்தைக்குறைவாக யிருப்பதாக புகார் ஒன்று காதில்படுகிறது. அப்படியொன்றுமில்லை. இதாலி சண்டையிலிறங்குமென்று எதிர்பார்த்துத்தான் மேலே சொன்ன பந்தோபஸ்தெல்லாம் 9-மாத காலமாய்ச் செய்துவருகிறார்கள். பிரான்ஸ் தோற்றது ஒரு தூண்டுகோலாயிற்று. இந்திய கவர்ன்மெண்டார் ராணுவங்களை அதிகப்படுத்த சில யோசனைகளை ஏற்கனவே செய்திருந்தார்கள் ; அவைகளை இப்பொழுது அமுலுக்கு கொண்டுவருகிறார்கள்.

புகாருக்கு இடமில்லை ; இதை மேலும் விவரிக்கிறேன்.

1. ஆயுதங்கள், வெடிமருந்து முதலியவையைச் செய்யத் தொழிற்சாலைகள் வெகு வருஷங்களாய் இங்கு ஏற்கனவே உண்டு. வேறு சில தொழிற்சாலைகளும் இந்த வேலைக்காக, இப்பொழுது மாற்றி அமைக்கப்பட்டிருக்கின்றன. இவைகளில் செய்யும் சாமான்கள் நமக்குங்கண்டு, நேச நாடுகளுக்கும் ஏராளமாய் விற்றுவருகிறோம்.

2. மோட்டார் கவசத் தகடு, கப்பல், கடல்வெடி ஒதுக்கும் யந்திரம், நீர்மூழ்கி எதிர்க்கும் யந்திரம், போன்றவைகளையும் செய்துவருகிறோம்.

3. துப்பாக்கி சுடுவது, நீர்மூழ்கியை எதிர்ப்பது, கடற் கண்ணியை அகற்றுவது, தந்தி கொடுப்பது, மெகானிக் வேலை—இவைகள் கற்றுக்கொடுக்க பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. நவீன யுத்தத்திற்கு லாயக்காக நூற்றுக் கணக்கான ராணுவஸ்தர்கள் இவைகளில் பயின்று வருகிறார்கள்.

4. இந்தியப் படைகள் அக்கரை நாடுகளுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. யந்திர ஸாதனங்களோடுவரும் எதிரியை எதிர்க்க முஸ்தீப்புகள் இவர்களிடத்தில் இருக்கின்றன. மேலும், ஏற்கனவேயுள்ள பக்கா (Regular) சைன்யங்கள், உள்நாட்டுப்படைகள் (Territorials), கோட்டை பாதுகாப்புப்படைகள் (Garrisons), ஸமஸ்தானப் படைகளெல்லாம் அதிகமாக்கப்பட்டிருக்கின்றன.

"ஏன், ஐயா, இந்த ஜாபிதாவை ஒப்பிக்கிறீர்கள். இந்தப் புராணமெல்லாம் ஒரு விதத்தில் ஸ்வாரஸ்யமாக யிருந்தாலும் எங்களுக்கு எதற்கு. மகா-ா-ா-ஸ்ரீ His Highness the Raja அவர்கள் தன்னுடையதெல்லாவற்றையும் அர்ப்பணம் செய்வதாக, ா-தர்பார் மூலமாய், சொன்னதற்கு இந்திய கவர்ன்மெண்டார் அங்கீகரிக்கவில்லையாமே. படைதிரட்டும் அதிகாரிகள் புதுக்கோட்டையில் ஆட்களை அதிகமாகச் சேர்க்கவில்லையாமே. நாங்கள் இல்லாமலே காரியம் நடக்கும். ஏன், ஐயா, இதைப்பற்றியெல்லாம் எங்களிடம் பேசுகிறீர்கள்" என்று கேட்கலாம்.

அப்படியல்ல, நீங்கள் சும்மாயிருக்குங்காலம் போய்விட்டது. துணையாய் நின்ற பிரான்ஸ் தோற்றுப்போனதுமட்டுமல்ல, இறந்துபோனதாகவே வைத்துக் கொள்ளவேண்டும். இதாலி சத்துருவானதிலிருந்து யுத்தம் நம்முடைய காலடிக்கு வந்துவிட்டதென்று ஏற்கனவே சொன்னேன். வெளிப்படையாகத் தெரியாமல் போனாலும் உண்மை இதுதான். இதைத் தெரிந்துதான் இந்திய கவர்ன்மெண்டும் யுத்த முஸ்தீப்புகளை அதிகப்படுத்திக்கொண்டுவருகிறார்கள். யோசனைசெய்து வைத்திருந்த பெரிய ஏற்பாடுகளையெல்லாம் இப்பொழுது அமுலுக்குக் கொண்டுவருகிறார்கள்; ஆனால் நாள்பிடிக்கும்; துரிதம் செய்து கொண்டுதானிருக்கிறார்கள். இதற்கு, மாகாணங்களிலும் ஸமஸ்தானங்களிலுமுள்ள நாம் நல்லமனதோடு ஒத்துழைக்கவேண்டும். புதுக்கோட்டைவாசிகளாகிய நாமும் அதற்குத் தயாராகவேண்டியதுதான். மற்றும் சில விவரங்களைச் சொல்லுகிறேன்.

1. இதுவரையில் ஒரு லக்ஷம் சிப்பாய்கள் தயாராகி யுத்தத்துக்குக் கூப்பிடப்பட்டிருக்கிறார்கள். மேலும் சிப்பாய்களைச் சேர்ப்பதற்கு தளவாடங்களும், விடுதி (Barracks)களும், உத்தியோகஸ்தர்களும் வேண்டும்; கிடைக்கவில்லை.

2. பழக்குவதற்கு, குறைந்தது 8-மாதம் பிடிக்கும். துரிதப்படுத்துவதற்காக, பழகியவர்களோடு பழகாதவர்களைச் சேர்த்து அணிவகுக்கப்படுகிறது. இவ்விதம் வகுப்புக்களையும் அதிகப்படுத்தலாம்.

3. சிறு வகுப்புகளைச் (Companies) சேர்த்து படாலியன் (Battalion), ப்ரிகேட் (Brigade), டிவிஷன் (Division) என்ற பெரிய அணிகளை வகுக்க வேண்டும். இதற்கு விசேஷ அனுபவமுள்ள மேலதிகாரிகள் வேண்டும். ரிஸர்வ் (Reserve)ல் இருந்தும், ராணுவப் பள்ளிக்கூடங்களிலிருந்தும் இதற்காக இந்தியர்களையும், ஐரோப்பியர்களையும் பொறுக்குகிறார்கள்.

4. இளைஞருக்கு யுத்தப்பயிற்சி கொடுக்கப் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. ஏற்கனவே உள்ளவைகளை விசாலப்படுத்தி, புதிய பள்ளிக்கூடங்களும் வைக்கப்பட்டிருக்கின்றன. இவைகளில் 6-மாதத்துக்கு 500-சிறுவர்கள்வீதம் தயாரிக்கலாம். 1941-முதல் வருஷத்துக்கு 1,100-பெயர்களைத் தயாரிக்கலாம். யுத்தத்துக்குமுன் இருந்ததைவிட இது 100-க்கு 2,000-பங்கு அதிகம்.

5. படையெடுப்புக்கும், பாதுகாப்புக்கும் தற்காலத்தில் விமானங்கள் அவசியம். இதை உணர்ந்த இந்திய விமான இலாகா, முன்னைக்காட்டிலும் 4-பங்கு விமானங்களை அதிகமாக்கியிருக்கிறார்கள். அதற்கு வேண்டிய விமானிகளையும், தரை சிப்பந்திகளையும் வெகுவாய் நியமித்தாய்விட்டது. பிரயாண விமான (Civil Aviation) நிலயங்களில் 300-விமானிகளும், 2,000-தொழிலாளி (Mechanics)களும் தயாராய்வருகிறார்கள். இவர்களை ரிஸர்வாக வைத்துக் கொண்டு வேண்டியபடி சைன்யத்தில் சேர்த்துக்கொள்ளலாம். விமானப் படையை இன்னமும் விசாலப்படுத்தலாம். அதற்கு எதிர்பாராத இடைஞ்சல்

ஒன்றிருக்கிறது. விமானங்கள் கிடையாது. இதுவரையில் இந்தியாவில் விமானங்கள் கட்டவில்லை. வெளியிலிருந்து விலைக்கு வாங்கலாமென்றால், யுத்தத்தில் சேர்ந்திருக்கும் நாடுகளெல்லாம் வாங்கிக்கொண்டிருப்பதால், கிராக்கி ஏற்பட்டு இருக்கிறது. ஆனால் இனி நாமும் விமானங்கள் கட்டப்போகிறோம். அயல் நாடுகளிலிருந்தும் ஏராளமாய் இனி வாங்கலாம். சீக்கிரத்தில் மகத்தான விமானப்படை நமக்கு ஏற்படப்போகிறது.

அடுத்த வார—(அதாவது—4-ம் ந.) அறிக்கையில், இந்திய, யுத்த முயற்சிகளின் விவரத்தைக்காட்டும் கட்டுரையொன்று வெளிவரும். அதில் கண்டிருப்பவைகள் ஆச்சரியத்தையும், தெம்பையும் கொடுக்கும். இன்னும் சில மாதங்களில் ஜரூராய் வேலை நடக்கும். காலி ஏற்படும் போதெல்லாம் நம்முடைய சேவையைக் கோருவார்கள். எவரும் போகவேண்டிவரும். தரையிலும், கடலிலும், ஆகாயத்திலும் நடக்கும் சண்டைக்கு லாயக்கு உள்ளவர்கள் அவ்விதசேவையைச் செய்வார்கள். பழைய மதராஸ் சைன்யத் (Madras Regiment)தை புனருத்தாரணம் செய்யப்போகிறார்களாம். அதில் புதுக்கோட்டை வாலிபர்கள் சேரவேண்டாமா? அதற்காக இப்பொழுதே சரீரத்தைத் திடப்படுத்திக் கொண்டு, மனோசுத்தத்தையும், விவேகத்தையும் தேடவேண்டாமா? நாம் செய்யக்கூடிய சேவைகளுக்குக் கணக்கில்லை விமானம், மோட்டார் முதலியவை ஓட்டுதல், யந்திரத்தொழில் (Mechanic) விமான நிலய சிப்பந்தி வேலைகள், ஆஸ்பத்திரி ஏவல் வேலைகள் இவைகளை உதாரணமாகச் சொல்லுகிறேன். எந்தவிதத்திலாவது உலக நாகரீகத்தையேகெடுக்க வந்திருக்கும் சத்துருவை துவம்சம் செய்யவேண்டும். நம்மை ஒரு சமயம் கூப்பிடத்தான்போகிறார்கள்; நாம் அதற்குத் தயாராயிருக்கவேண்டும்.

அப்பேற்பட்ட சமயம் வரும்வரை நாம் எவ்விதம் நடந்துகொள்ள வேண்டுமென்று சொல்லுகிறேன். வெற்றியை நம்பிக்கையுடன் எதிர்பார்த்துக் கொண்டு, சந்தோஷத்தைக் கைவிடாது, நமக்குள்ள காரியங்களைப் பார்த்துவர வேண்டும். யுத்தம் எந்த ரீதியாய் நடந்தாலும், முறுமுறுக்கக்கூடாது, திகில் அடையக்கூடாது; இகழக்கூடாது. அவ்யவஸ்தையாய்ப் போய்விட்டது என்றும், ஏமாற்றிவிட்டார்கள் என்றும், தோற்றுப்போய்விட்டார்கள் என்றும் பலவாறாக அக்கப்போர்களைக் கிளப்பிவிடுவார்கள். ருஜுவில்லாமல் எதையும் நம்பக்கூடாது; பிறருக்கும் அதைச் சொல்லக்கூடாது. அக்கப்போர் அஸாமிகள், தோல்விபுத்திக்காரர்கள், சாகுருவிகள், ராஜத்துரோகிகள் இப்பெயர்களை வைத்தே அவர்களைக் கூப்பிடவேண்டும். மற்றொரு முக்கியகாரியம் நம்முடைய கவர்ன்மெண்டை நாம் நம்பவேண்டும்; ஆதரிக்கவேண்டும்; அதற்கு ஒருவித இடைஞ்சலையும் செய்யக்கூடாது. பிரிடிஷ், இந்திய, புதுக்கோட்டை கவர்ன்மெண்டுகளெல்லாம் இப்பொழுது செய்துவருகிற பிரயத்னமென்ன என்று உணரவேண்டும். எதிரி தோற்கவும், நாமும், உலகமும் உஜ்ஜீவிக்கவும் தம்மாலியன்ற பிரயத்தனங்களெல்லாம் செய்துவருகிறார்கள். நம்முடைய முயற்சியையும் அதில் சேர்க்கவேண்டும். அவசியமேற்படும்போது தைர்யமாய், சரீர சேவை செய்வோம். அதுவரை நான் சொன்னபடி மனதை ஒழுங்குபடுத்தி வைத்துக்கொள்ளவேண்டும்.

அனுபந்தம் I.

ரஷியா என்ன செய்யப்பார்க்கும்?

(குறிப்பு:—இந்தக் கட்டுரை இங்கிலாந்தில் டெய்லி ஹெரால்டு (Daily Herald) பத்திரிகையில் மிஸ்டர் W. N. ஈவர் (Mr. W. N Ewer)ஆல் எழுதப்பட்டு, இந்தியாவுக்கு தந்தியில் வந்து, சிறு மாறுதல்களோடு இங்கு பிரசுரிக்கப்பட்டிருக்கிறது).

ஹிட்லர் (ஜர்மனி), முஸோலினி (இதாலி), ஸ்டாலின் (ரஷியா) ஆகிய மூவரும் கூடு களவாணிகள். ஐரோப்பாவிலுள்ள மேல், உள் நாடுகளை, முதல் இருவரும் பங்குபோட்டுக்கொண்டும், எல்லைகளை மாற்ற யோசனை செய்து கொண்டுமிருக்கிறார்கள். ஸ்டாலின் கீழ்நாடுகளின் தலையில் எப்படிக்கை வைக்கலாமென்று பார்க்கிறார்.

ஸ்டாலின் சென்ற வருஷம்தான் ஹிட்லரோடு கலந்துகொண்டு, சைன்யங்களைக் கொண்டு பயமுறுத்தி, பால்டிக் (Baltic) நாடுகளை அபகரித்தார். ஆனால் பால்கன் நாடுகளில் பிரவேசிப்பதில்லையென்று முஸோலினியோடும் ரகஸ்யமாய் ஒப்பந்தம் செய்துகொண்டார். பிரதியாக துருக்கி (Turkey)யை இங்கிலாந்தோடு சேராமல் அடக்கிவைத்துக்கொள்ளுவதாக வாக்குறுதி செய்தார்.

ஆனால் இப்பொழுது, அவர் நடுநிலையை விட்டுவிட்டு, பால்கன்நாடுகளில் ஒன்றாகிய ருமேனியா (Rumania)வுக்குச் சொந்தமான பெஸரேபியா (Bessarabia)வைப் பிடித்துக்கொண்டார். இது (1919-ல் ரஷியாவிடமிருந்து ருமேனியா எடுத்துக்கொண்டது); போதாதென்று, புகோவினாவை (Bukhovina) யும் பிடுங்கிக்கொண்டிருக்கிறார்.

துருக்கி (Turkey), பல்கேரியா (Bulgaria), யுகோஸ்லாவியா (Yugoslavia) முதலிய நாடுகளைத் தன்கீழ் ஆக்கிக்கொண்டு, மத்யதரை (Mediterranean), எட்ரியாடிக் (Adriatic) கடற்கரைகள்வரையில் தன் செல்வாக்கைப்பரவச் செய்ய வேண்டுமென்பது ஸ்டாலினின் நோக்கம். இவ்விடங்களிலெல்லாம், எல்லைகளில், சைன்யங்களைவைத்து, ஆர்ப்பாட்டம் பண்ணி வம்பு செய்துவருகிறார்.

ஹிட்லருக்கும், முஸோலினிக்கும், இதில் உத்ஸாகமில்லையானாலும் சம்மதிக்காது இருக்கமுடியவில்லை. காரியத்தைவேண்டிக் கழுதையின் காலைப்பிடிக்க வேண்டியிருக்கிறது. எப்படியாவது ரஷியா இங்கிலாந்தோடு சேராது, துருக்கியை அடக்கி வைத்துகொள்ளவேண்டியிருக்கிறது. இதற்காக ஸ்டாலின் எதைக் கேட்டாலும் கொடுக்கச் சம்மதம்.

இம்மூவர்களுக்குள் இனிக்கலகம் ஏற்படப்போகிறது நிச்சயம்; ஆனால் இப்பொழுது ஒருவருக்கொருவர் சண்டைபோட்டுக் கொள்ளமாட்டார்கள். ஸ்டாலினுடைய நோக்கம் இதுவே:—நேற்று சிநேகமானாலும் ஜெர்மனியையும் இதாலியையும் விரோதித்துக்கொள்ளமாட்டார்; இங்கிலாந்தோடும் சேரமாட்டார்; அகப்பட்ட வரையில் சுருட்டப்பார்ப்பார்.

அனுபந்தம் II.

A.—ஜெர்மன் பொய்கள்.

குறிப்பு:—இவைகள் ஜெர்மனியிலிருந்து கீழேகண்ட தேதிகளில் ஒலி பரப்பப்பட்டு வந்த செய்திகள். ஒவ்வொன்றின் கீழும், அது என் பொய் பிரசாரம் என்று எடுத்துக்காட்டி கண்டனம் செய்யப்பட்டிருக்கிறது.

25—6—40.

1. "*பிரிடிஷ் அரசருக்காக அமர்த்தியிருந்த கப்பல் முழுகடிக்கப்பட்டது. இது பிரிடிஷ் கடற்படை இலாகாவிலிருந்துவந்த அரை-ஸர்க்கார் செய்தி.*"

குறிப்பு:—காம்பிடார் (Campeador) கப்பலைப்பற்றியிருக்கலாம். இது யுத்தக் கப்பல். யுத்தத்தில் யுத்தக் கப்பல் உடைந்துபோவது ஸகஜம். இதைப்போல அரசருக்கு 2,000-கப்பல்கள் இருக்கின்றன. தனக்கென்று கப்பல் ஒன்றையும் அவர் அமர்த்திக் கொள்ளவில்லை.

2. "*இன்று காலை 1-45-க்கு யுத்தம் நிறுத்தப்பட்டது. இதாலி (Italy) யின் வீரப்படைகள் பிரான்ஸி (France)-ல் பெரும் பாகத்தைப் பிடித்துக் கொண்டன.*"

குறிப்பு:—'வீரம்' என்னவென்று தெரியவில்லை. யுத்தம் நடந்துகொண்டு இருந்தபோதெல்லாம் ஆல்ப்ஸ் (Alps) பிரதேசத்தை விட்டு நகரவில்லை; யுத்தத்தை நிறுத்தியவுடன் ரிவியரா (Reviera) பிரதேசத்தில்வந்து உட்கார்ந்துகொண்டார்கள்.

3. "*அனுவசியமான சேதம் ஏற்படாதபடி ஏதோ சில படைகளைத்தான் சண்டைக்கு அனுப்பினோம் (ஜெர்மன் ராணுவ இலாகா செய்தி).*"

அனுப்பிய படைகள்—120! இதை 'சில' என்கிறார்கள்.

26—6—40.

4. "*போலண்ட் (Poland), நார்வே (Norway), ஹாலண்ட் (Holland) இவைகளில் இருந்த பணத்தையெல்லாம், பிரிடனுக்கு உதவிசெய்ய, லண்டனு (London)-க்கு அனுப்பிவிட்டார்கள்.*"

குறிப்பு:—பணம் லண்டன் பாங்கில் பத்திரமாயிருக்கிறது. திருடனுக்குத் தன் கையில் அகப்படவில்லையென்று மனத்தாங்கல் இருக்குந்தான்.

5. *“ஜெர்மனிக்கும், பிரான்ஸுக்கும் பரஸ்பர லாபமிருந்ததால் உடன்படிக்கை (ஆர்மிஸ்டிஸ்) ஸமரஸமாய் முடிந்தது.”*

குறிப்பு :—பிரான்ஸுக்கு லாபம் ஒன்றுமில்லை. அதின் முக்கால் பாகத்தை எடுத்துக்கொண்டு ஜெர்மனி பாக்கி ஒருபாகத்தைத் தன் பார்வையில் வைத்துக்கொண்டிருக்கிறது. ரேடியோ நிலயங்கள் பரிமுதலாய்விட்டன. ஜனங்கள் நிராயுதபாணியாக்கப்பட்டிருக்கிறார்கள். தேசத்துக்கும், பிரஜைகளுக்கும் இருந்த சுதந்திரம் போய்விட்டது. அவமானம்தான் மிச்சம்.

6. *“வைஸ்ராயும், கவர்னர்களும் படை திரட்டும் மாதிரியைப் பார்த்தால், இந்தியர்களை அடக்கிவைக்கத்தான் என்று தோன்றுகிறது.”*

குறிப்பு :—இப்பொழுது இந்தியாவில் விமானப்படை திரட்டுகிறார்கள். இது உட்பாதுகாப்புக்கில்லை. விமானப் பயிற்சிக்காக 90 பேர்களும், ரிஸர்வுக்காக 300 பேர்களும் தேவையென்று சொல்ல இந்த வேலைகளுக்கு நாள் ஒன்றுக்கு 2000-த்திலிருந்து 3000 மனுக்கள் வருகின்றன.

7. *“மார்ஷல் பிடேன் சொன்னது :—உடன்படிக்கை (ஆர்மிஸ்டிஸ்) செய்துகொண்டது ஸரியான மதியூகம். கவுரவமானது.”*

குறிப்பு :—ஜெனரல் டி கால் (General De Gaulle) சொன்னது:--மானமும், புத்தியும் இருந்திருந்தால் பிரான்ஸ் சண்டையை நிறுத்தியிருக்காது. இங்கிலாந்தைக் கேட்காமல் தனியாக உடன்படிக்கை செய்வதில்லையென்று வாக்குக்கொடுத்துவிட்டு, சண்டையை நடுவில் நிறுத்தியது அவமானம். மேலும் பிரான்ஸ் இன்னும் வாஸ்தவத்தில் தோல்வியடையவில்லை. அதன் குடியேற்ற நாடுகளிலிருந்து வேண்டிய உதவி கிடைக்கும்; கடல்களில் சக்திவாய்ந்திருக்கும் பிரிடனுடைய துணையிருக்கிறது; அமெரிக்கா தொழிற்சாலைகளிலிருந்து வேண்டிய சாமான்கள் கிடைக்கும் ; ஆகவே சண்டையை நிறுத்தியது புத்திஹீனம்.

8. *“பிரிடனில் உணவுப் பொருள்கள் குறைந்துவிட்டன ; அநேக இடங்களில் கலகம்.”*

குறிப்பு :—வேண்டிய அளவு உணவுப்பொருள்கள் சேகரிக்கப்பட்டிருக்கின்றன; வெளியிலிருந்து தடையின்றி முக்கியமான உணவுப் பொருள்கள் வரவும் ஏற்பாடாயிருக்கிறது. ‘உணவு’ இலாகாவில் வருஷத்துக்கு 600 மிலியன் பவுன் கொடுக்கல் வாங்கல் ஆகிறது; 23,000 சிப்பந்திகள் வேலை செய்கிறார்கள். நில ஸ்வாந்தார்கள் லாபத்தைக் கோராது ஏழைகளுக்கு தங்களுடைய தான்யங்களை விற்கத் தயாராய் இருக்கிறார்கள்.

மேலும், கானடா (Canada), பிரிடிஷ் கொலம்பியா (British Columbia) நாடுகளிலிருந்து பிரிடனுக்கு கோதுமை ஸப்ளை ஆகிறது. முன் வருஷங்களைக்காட்டிலும், இந்த தேசங்களில், இந்த வருஷம், விளைவு அதிகம். கானடாவில் 1,500,000 ஏக்ரா கூடுதலாக கோதுமை விதைத்திருக்கிறது. ஜூலை 31ம்உவரை கணக்குப்படி சென்ற வருஷக்கையிருப்பு 241,000,000 புஷல் (Bushel)கள்; எதிர்பார்க்கும் கண்டு முதல், 391,500,000,000 புஷல்கள்; ஏற்றுமதிக்கு மிஞ்சக் கூடியது 431,000,000 புஷல்கள்.

28—6—40.

9. "அட்லாண்டிக் (Atlantic) ஸமுத்திரம் முழுவதையும், ஸ்பெயின் வரையில், ஜெர்மன் ராணுவம் ஆள்கிறது."

குறிப்பு:—பிரிடிஷ் கடற்படை ஆள்கிறது என்று சொன்னால் உண்மை ஆகும்: பிரிடிஷ் கடற்படைக்கு பலம் அதிகம். பிரிடன் உள்நுழைந்துவிடுமோவென்று பயந்து ஜேர்மன் படைகள் கரை ஓரங்களில் காவல்காத்துக்கொண்டிருக்கின்றன.

10. "இந்தியாவில் அமைதியிருப்பதாக ஸர்க்கார் பிரசாரம் செய்கிறார்கள். ஆனால், அமைதி இல்லாததால்தான் பம்பாய் துறைமுகம் மூடப்பட்டிருக்கிறது—இப்படி டோக்யோ (Tokyo)விலிருந்து செய்தி வந்திருக்கிறது."

குறிப்பு:—இதாலி (Italy) நீர்மூழ்கிகள் (Submarines) சஞ்சரிப்பதாகத் தெரிந்து பம்பாய் துறைமுகம் மூடப்பட்டிருக்கின்றதென்று அதே தேதியில் அதே ஊரிலிருந்து மற்றொரு செய்தியும் வந்திருக்கிறது. இதுதான் உண்மை. இந்திய கடற்படைகளும் இரண்டு நீர் மூழ்கிகளைக் கண்டுபிடித்து ஏற்கனவே அமிழ்த்திவிட்டன.

29—6—40.

11. "நட்டாற்றில் பிரிடன் கையை விட்டுவிட்டது. பிரான்ஸ் இனி, பிறருக்காக உழைக்காமல் தன் க்ஷேமத்தையே நாடும் என்று பிகாரோ (Figaro) என்ற பிரெஞ்சு பத்திரிகை கூறுகிறது."

குறிப்பு:—இப்பொழுது பிரேஞ்சு பத்திரிகைகளே கிடையாது. ஜேர்மனி சொல்லிக்கொடுத்து பிரேஞ்சு பாஷையில் பிகாரோவைப்போல் எழுதும் பத்திரிகைகள்தான் உண்டு.

12. "ஸிரியா (Syria)வுக்குள் யுத்தம் பரவாதிருக்க எல்லைகளில் துருக்கி (Turkey) தன் ராணுவங்களை நிறுத்தியிருக்கிறது."

குறிப்பு:—எல்லாம் இதாலி வம்புபண்ணமலிருக்கத்தான்.

13. "1919-ல் இருந்து 1940-வரை—21 வருஷங்களாக—வெறும்பேச்சாய் இருக்கிறதே ஒழிய, காரியத்தில் சுயேச்சை ஒன்றும் இந்தியர்களுக்கு பிரிடிஷ் ஸாம்ராஜ்யம் கொடுக்கவில்லை."

குறிப்பு :–1919-ல் மான்டேக்யூ–செம்ஸ்போர்ட் (Montague–Chelmsford) சீர்திருத்தங்கள் கொடுக்கப்பட்டன; 10-வருஷங்களுக்குப் பின்னல் வட்டமேஜை சபைகள் மூன்று முறை கூடி ஆலோசனை செய்து, 1935-ல் மாகாண சுயஆட்சியும், மத்தியில் (மேலே) ஐக்கிய ஆட்சியும் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

30—6—40.

14. "இங்கிலாந்தில் வசிக்கும் பிரெஞ்சுக்காரர்கள் பிடேன் (Petain) ஸர்க்காருக்கு ராஜவிச்வாசம் காட்டுகிருர்கள்"

குறிப்பு :—இல்லை; இவர்கள் ஜெனரல் டி கால் திரட்டும் படையில் சேருகிருர்கள்.

2—7—40.

15. ஹாலண்டி (Holland)ல் யுத்த ப்ராதான்யமில்லாத இடங்களை பிரிடிஷ் விமானங்கள் தாக்குகின்றன; இது பிரிடனுக்கு அழகில்லை. ஜெயிக்க இடமில்லாமல் போனாலும், தைர்யமாய் ஜெர்மனியை எதிர்த்து ஹாலண்டு நின்றபோது உதவிக்கு பிரிடிஷ் விமானங்கள் வரவில்லை; ஹாலண்டால் இனி லாபமொன்றும் இல்லையென்று இப்பொழுது பிரிடிஷ் விமானங்கள் தாக்குகின்றன.

குறிப்பு :—ஜேர்மனி ஆக்ரமித்தபோது பிரிடிஷ் விமானங்கள் ஹாலண்டுக்கு உதவி செய்தன. இதற்காக ஹாலண்டு ராணி வில்ஹெல்மினு (**Queen Wilhelmina**) பகிரங்கமாய் பிரிடிஷ் விமானப் படைக்கு, தன் வந்தனத்தைச் செலுத்தியிருக்கிருர்கள்.

16. வட ஆப்ரிக்காவுக்கு சேனுதிபதியாக மார்ஷல் க்ரஸியானி (Marshal Graziani)யை நியமித்ததில் இதாலி பத்திரிகைகளுக்கு அதிக திருப்தி. வட ஆபிரிக்கர்களுடைய பிரீதியை இவர் பெற்றவராதலால் இதாலியர்களும் இந்த நியமனத்தை ஆதரிக்கிருர்கள்.

குறிப்பு :—இவருக்கு நல்ல பேர் கிடையாது. ஜனங்கள் வெறுத்து, வெடி குண்டுகளைப்போட, இவர் அபிஸீனியா (**Abyssinia**)-வில் இருந்து ஓட்டம் பிடித்தார். சொன்னபடி கேட்காத தலைவர்களை விமானங்களில் ஏற்றிக்கொண்டு அவர்களுடைய ஊர்களுக்கு நேரே வரும்போது தள்ளிவிடுவார்களாம்; இது தான் இதாலியர்கள் லிப்யா (**Libya**)வில் எடுத்த பேர்.

17. கொலோன் ஆர்ச்சுபிஷப் (Archbishop of Cologne) ஹிட்லரு(Hitler)ம், அவர் சைன்யங்களும் அடைந்த கீர்த்தியையும் வெற்றியையும் புகழ்ந்து உத்தியோகபற்றில்லாத பத்திரிகையில் எழுதியிருக்கிருர்.

குறிப்பு :—ஆனால் அவருக்கு மேலான பகவான் போப் (**His Holiness the Pope**) அபிப்பிராயம் வேறு. "ஹாலண்டு (**Holland**), பெல்ஜியம் (**Belgium**), லக்ஸம்பர்க் (**Luxemburg**) நாடுகளை ஜெர்மனி பிடித்துக்கொண்டது நம்முடைய மனதைப் புண் படுத்துகிறது; அவைகள் படும் கடுங்கஷ்டம் நீங்கி, சுயேச்சையை அடைய, கடவுளை பிரார்த்தித்து, ஆசீர்வதிக் கிறோம்" என்று மே **11**-ல் செய்தி விடுத்திருக்கிறார்.

18. *"பிரிடன் ஆபத்தில் மாட்டிக்கொண்டது. மாஜினோஅரணை (Maginot line) விட பிரிடிஷ் தீவுகள் பலக்குறைவு" என்று பிரெஞ்சு பத்திரிகைஒன்று சொல்லுகிறது.*

குறிப்பு :—அதாவது மாஜினோ அரணைப்பிடித்த ஜெர்மானியருக்கு பிரிடிஷ் தீவுகளைப் பிடிப்பது எளிது என்பதற்காக. ஆனால் பிரிடிஷ் தீவுகளைக் காக்க உலகத்துக்குள் மகத்தான கடற்படையிருப் பதை இந்தப் பத்திரிகை மறந்துவிட்டது. மேலும் ஜெர்மனி சொல்லிக்கொடுத்து எழுதுகிற பத்திரிகைதானேயிது.

3—7—40.

19. *யுத்த மேற்கு முனையில், உலகத்தில் மிகப்பலமான, அல்லது, மிகப் பலமானவைகளில் ஒன்றான, மாஜினோஅரணைப் பிளக்க நேரிட்டது.*

குறிப்பு :—ஜெர்மானியர் மாஜினோ அரணைப் பிளக்கவில்லை; உடன்படிக் கைக்குப்(ஆர்மிஸ்டிஸ்) பிறகுகூட 22,000 பிரெஞ்சு துருப்புகள், இங்கே யுத்தம் செய்து கொண்டிருந்தன. பிரெஞ்சு, பெல்ஜிய எல்லையிலிருக்கும் ஸெடான் (**Sedan**)ஊரிலிருந்த பிரெஞ்சுப் படை பலம் குறைய, அங்கே புகுந்து, மாஜினோஅரணை வளைத் துக்கொண்டார்கள். இதுதான் ஜெர்மானியர் செய்த வேலை.

20. *"18-லிருந்து 50-வயதுவரையுள்ளவர்களை ராணுவத்தில் சேர இந்தியர் களைக் கட்டாயப்படுத்துகிறார்கள். இதற்கு இந்திய கவர்ன்மெண்டுக்கு அதிகார மேது", என்று ஸெத்ஞதேவி ராமன் என்ற இந்தியமாது இதாலிய பத்திரிகைக்கு எழுதியிக்கிறாள்.*

குறிப்பு :—இவ்வித உத்தரவே போடவில்லை. இந்த மாது யார்? பத்திரிகை எது? எழுதிய தேதி என்ன?

4—7—40.

21. *ஜெர்மனியின் மகத்தான ஜயத்தையெல்லாம் கருதுமிடத்து, பிரிடன் இல்லை (போய்விட்டதென்றே) என்றே வைத்துக்கொள்ளலாம்.*

குறிப்பு :—அப்படியானால் படையெடுப்பானேன்? இல்லாததைப் பிடிப்பது கஷ்டம்தானே.

22. *வழக்கம்போல், ஜெர்மனிக்கும் அமெரிக்காவுக்கும் ஸ்நேகபாவமும், பிரீதியும் இருக்கவேண்டுமென்று ஹிட்லர் செய்திவிடுத்து, அமெரிக்காவில் சிகாகோ (Chicago) விலிருக்கும் ஜெர்மன ஸ்தானிகர் (Consul) அதைப் படித்தார்.*

குறிப்பு :—ஜெர்மனியின் சிநேக வழக்கமெல்லாம் வெட்டவெளியாய்ப்போய் விட்டது. 'அநேக தேசங்களோடு நான் சிநேக உடன் படிக்கை செய்திருக்கிறேன் ; கொஞ்சமேனும் அவைகளில் இருந்து மாறமாட்டேன்' என்று ஹிட்லர் **1939**-ம்ஞு ஏப்ரல்மீ **28**-ம் தேதி போலண்டு, ஹாலண்டு, டேன்மார்க், பெல்ஜியம், லக்ஸம்பர்க் முதலிய நாடுகளுக்கு வாக்குக் கொடுத்தார். இப்போழுது அவைகளின் கதி நமக்குத் தெரியும்.

6—7—40.

23. *இஜிப்டிலிருந்து ஒன்றையும் பிரிடன் தானும் வாங்காது, பிறரையும் வாங்கவிடாது.*

குறிப்பு :—இஜிப்ட் தனி நாடு ; அதற்கு அரசனும், பார்லிமெண்டுமுண்டு ; பிரிடனோடு, வியாபார உடன்படிக்கை ஒன்றுமில்லே ; ராணுவங்களைச் சில இடங்களில் நிறுத்தத்தான் உடன்படிக்கை உண்டு. பிரிடன் ஒன்றும் வாங்கவில்லையென்று சோல்வது போய் ; இந்த வருஷத்திய பஞ்சு மாசூல் முழுதும் வாங்கிக் கோள்வதாக பிரிடன் பேசியிருக்கிறது.

8—7—40.

24. *பிரான்ஸில் விளையும் ஆகாரப்பொருள்கள் பறிமுதலாகி, புது இடங்களுக்கு அனுப்பப்படுகிறது ; ஆனல் இது அபகரித்ததாகமாட்டாது.*

குறிப்பு :—பறிமுதலுக்கும், அபகரிப்பதற்கும் வித்தியாஸம் புரியவில்லே.

B.—இதாலி ஒலிபரப்பு.

4—7—40.

25. *கைப்பற்றிய நாடுகளின் அனுகூலத்துக்காக, ஸகாய சங்கங்களை ஜெர்மனி ஏற்படுத்தியிருக்கிறது.*

குறிப்பு :—கைப்பற்றிய தேசங்களில் ஜெர்மனி செய்திருக்கும் அனுகூலங்கள் பின் வருமாறு :—

ஸெகோஸ்லோவேகியா **(Czechoslovakia).**

(i) **1939**-ம்ஞு நவம்பர்மீ :—**126** மாணுக்கர்கள் சுடப்பட்டார் கள்.

(ii) 1939-ம் வருஷம் நவம்பர்மீ:—400,000 பேர்களுக்கு மேல் கட்டாய ஊழியம் செய்யச் சொல்லப்பட்டார்கள்.

(iii) 1939-ம் வருஷம் டிஸம்பர்மீ:—800 சிப்பாய்கள் ஜெயிலில் அடைக்கப்பட்டார்கள்.

(iv) 1940-ம் வருஷம் பிப்ரவரிமீ:—ராணுவ பென்ஷன்தார்கள், பத்திராதிபர்கள், ஸ்கோடா (**Skoda**) தொழிற்சாலை உத்தியோகஸ்தர்கள் 700 பேர்கள் கைது செய்யப்பட்டார்கள்.

(v) தலை நகராகிய ப்ரேகை (**Prague**)ப் பிடித்த 24-மணிக்குள் ரகஸ்ய போலீஸார் (**Gestapo**) 5,000 பேர்களைக் கைது செய்தார்கள்.

(vi) தற்கொலை, கைது, வேலை, கூலி, ரகஸ்ய போலீஸ், ஊர்நிலைமை இவைகளைப்பற்றி பத்திரிகைகள் ஒன்றும் எழுதக்கூடாது என்று உத்தரவு பிறந்திருக்கிறது.

போலண்டு (**Poland**).

(i) மாலை 9-லிருந்து காலை 5-வரையில் தொழிலாளிகள் வெளியே போகக்கூடாது; ட்ராம் முதலிய போர்து வாகனங்களை உபயோகிக்கக்கூடாது. ஞான, மத, ஸமூக அபிவிருத்திக்காக ஏற்பட்டிருக்கும் ஜேர்மன் சங்கங்களில் சேரக்கூடாது; சாப்பாட்டுக்கடை, சாராயக்கடைகளுக்குப் போகக்கூடாது.

(ii) போலண்டு மக்களோடு கிட்டிய சிநேகமும், நேர் நடவடிக்கையும் வைத்துக்கொள்வது ஜேர்மானியருக்கு அவமானம்; போலிஷ்காரர்கள் அபேக்ஷித்தாலும் சிநேகத்துக்கு இடம் கொடுக்கக்கூடாது.

(iii) போலண்டுக்கு 4-வருஷத்திட்டமொன்று போடப்பட்டிருக்கிறது. இது போலண்டின் நீடித்த பொருளாதார க்ஷேமத்துக்கில்லை. ஜேர்மன் யுத்தத்துக்கு சாதகமானது. விவசாயத்தை அதிகப்படுத்தி, ஜேர்மன் சைன்யங்களுக்கு வேண்டிய உணவு அனுப்பியதுபோக, பாக்கியைத்தான் உள்ளூர் உபயோகத்துக்கு வைத்துக்கொள்ளவேண்டும். காட்டையழித்து மரங்கள் அதிகமாக ஏற்றுமதியாகின்றன, தொழிற் சாலைகளில் யுத்த தளவாடங்கள் அதிகமாய் செய்யப்படுகின்றன. 250,000-பேர்கள் விவசாயத்துக்கும், பத்து லக்ஷம்-பேர்கள் (ஆண்களும், பெண்களும்,) கூலி வேலைக்கும் ஜேர்மனிக்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள்; பலக்குறைவு இல்லாமல் வேலை செய்வதற்கு வேண்டிய ஆகாரம் மட்டும்தான் போடுகிறார்கள்.

(iv) இந்த ஜனங்களுக்கு வீடில்லாமல், நாதியில்லாமல் மானங்கெட்டு, செய்யப்படும் பயங்கரமான அக்கிரமங்களைக் கேட்டு குருநாதர் போப் அவர்களும் துக்கத்தில் மூழ்கியிருக்கிறதாகச் செய்தி கிடைத்திருக்கிறது.

வார யுத்தச் செய்திகள்.

(18—7—40 லிருந்து 23—7—40 வரை)

ஜெர்மனி.—18-ம் தேதி ரைச்ஸ்டாக் (Reichstag) சபையில் ஹிட்லர் செய்த பிரஸங்கத்தை பிரிடிஷ் ஸாம்ராஜ்யமும், உலகமும் கண்டித்ததே இந்த வாரத்திய முக்கிய செய்தியாகும். இவர் பேச்சு விரோதமும், இறுமாப்பும் கூடியதாயிருந்தது. வெர்ஸெயில்ஸ் (Versailles) உடன்படிக்கை அநியாயமானதென்று, பழைய தாலாட்டுக் கதையை, வழக்கம்போல் சொல்லிவிட்டு, தன் ஜயப்ரதாபங்களைக் கூறி, கடவுள் தன்னை அனுப்பியிருப்பதாக பெருமை பேசி, தான் வெற்றி அடைந்திருந்தபோதிலும், நியாயத்துக்கும், மனசாட்சிக்கும் கட்டுப்பட்டு சமாதானத்துக்குத் தயாரென்றும், அன்றியில் பிரிடன்மேல் படையெடுத்து விடப்போவதாகவும், அகம்பாவமாய் பேசி பயமுறுத்தினர்.

இதையெல்லாம் எதிர்பார்த்தே போர் கடுமையாய் விரைவில்முடிந்தாலும் சரி, நீடித்தாலும் சரி, விடப்போவதில்லை; சமாதானப் பேச்சும் கிடையாது, உடன்படிக்கையும் கிடையாது, என்று பிரிடிஷ் பிரதம மந்திரி முன்னதாகவே ஜுலை 14-ல் சொல்லிவிட்டார். 'முற்காலத்திய இஜிப்த் (Egypt) கொடுங்கோலரசர்களைப்போல் ஹிட்லரிப்பொழுது தோன்றியிருக்கிறார். குழந்தைகள் தூங்கத் தாலாட்டுவதுபோல், ஏமாற்றுவதற்காக, சமாதானப்பேச்சுகளைப் பேசுவார். ஏமாந்து போகக்கூடாது.' என்று, அமெரிக்காவிலிருந்து பிரஸிடெண்டு ரூஸ்வெல்ட (President Roosevelt) ஹிட்லர் பேசுவதற்கு சற்றுமுன், அதே தினத்தில் ஒலிபரப்பினர். 'பிரிடிஷ் மக்கள் எல்லோரும் இகழ்ந்து நகைக்க வேண்டிய பேச்சு இது', என்று ஆஸ்திரேலிய (Australian) பிரதம மந்திரி, ஹிட்லரின் பிரஸங்கத்தைக் கேட்டதும் சொன்னார். கானடா (Canada) பிரதம மந்திரி, 'பிரிடன் ஸ்வதந்திர ஆலயமல்லவா' என்றார். தென் ஆப்ரிகா (South Africa) பிரதம மந்திரி 'ஜெர்மன் ஆக்ரமத்திலிருந்து விடுவித்து ஐரோப்பாவுக்கு சுதந்திரம் கொடுப்பதே நமது திருஷ்டி' என்றார். 'ஹிட்லர் கிரிஸ்துவின் வைரி, நாம் கிரிஸ்துவுக்காகப் போரை நடத்துவோம்' என்று 22-ம் தேதி பிரிடிஷ் ஸர்க்கார் தரப்பில் லார்ட் ஹாலிபாக்ஸ் (Lord Halifax) பதில் விடுத்தார்.

சமாதானப் பேச்சாகவும், படையெடுக்குமுன் தன் சைன்யங்களுக்குச் சொன்ன தைர்யவார்த்தைகளாகவும் ஹிட்லர் பிரஸங்கம் தோன்றிய போதிலும், உண்மையில் அவை பயந்த வார்த்தைகள். பிரிடனுடைய கடல், விமானப்படைகளால் ஜெர்மானியர்கள் மிகத்துன்பமடைந்திருக்கிறார்கள். மனங்கலங்காதிருக்கக் கொடுத்த லாகிரியென்றே இந்தப் பேச்சை மதிக்கவேண்டும்.

பிரான்ஸ்.—700 ரெயில் பாலங்கள், அனேக ரஸ்தாக்கள், கால்வாய்கள், தந்தி, தபால், டெலிபோன்களெல்லாம், ஜெர்மனி படையெடுத்ததிலிருந்து நாசமாய் விட்டன. இவைகளை இப்பொழுது சரி பார்க்கிறார்கள். ஓடிப்போன கடைகள், பாங்குகள், உண்டியல் (Exchange), இன்ஷ்யூரன்ஸ் (Insurance)

கம்பெனிகள் திரும்பிவர அழைக்கப்படுகின்றன. ஓரான் (Oran) சண்டையில் ஏற்பட்ட நஷ்டத்தை ஈடு செய்யவேண்டுமென்று பிடேன் (Petain) கவர்ன் மெண்டு பிரிடனைக் கேட்கிறது.

தங்கள் வசமிருக்கும் பிரெஞ்சு வியாபாரக் கப்பல்களை பிரிடிஷார் இப்பொழுது உபயோகப்படுத்துகிறார்கள். யுத்தம் முடிந்தபிறகு இதற்கு ஈடு செய்யப்படும். இந்த கப்பல்கள், பிரிடிஷ் கொடியையும், பிரெஞ்சுக் கொடியையும் சேர்ந்தாற்போல் உபயோகிக்கவேண்டும்.

அமெரிக்க ஐக்கியதேச (U. S. A.) அரசாங்கம் பிடேன் (Petain) அரசாங்கத்தை அங்கீகரிக்கிறது; அதாவது ஏற்கனவே பிரான்ஸுக்குள்ள ஸ்திதியைக் குறைக்கவில்லை.

பால்டிக் நாடுகள்.—எஸ்தோனியா (Estonia), லிதுவேனியா (Lithuania), லாட்வியா (Latvia) நாடுகள் ஸோஷியலிஸ்ட் ஸோவியட் (Socialist Soviet) குடியரசுகளாகமாறி ரஷியாவோடு ஐக்கியமாய் விட்டன. லாட்வியாவில், பாங்கிகளும், தொழிற்சாலைகளும் ஸர்க்காரால் நடத்தப்படுகின்றன. குடியானவர்களுக்கு ஒவ்வொருவனுக்கு 30 ஹெக்டார்(Hectares)வீதம், விவசாயத்துக்கு நிலம் பங்கு செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. 750 மைல் கடற்கரையும், 60,000 சதுரமைல் நிலமும், 6,000,000 ஜனங்களும் இந்த ஏற்பாடுகளால் ரஷ்யாவுக்குக் கிடைத்திருக்கின்றன.

பால்கன் நாடுகள்.—ருமேனியா (Rumania)வின் கஷ்டம் விடியவில்லை. அங்கு வசிக்கும் 800,000 ஜெர்மானியர்களை ட்ரான்ஸில்வேனியா (Transylvania) பிரதேசத்தில் ஒன்று சேர்த்து சுதந்திரம் கொடுக்கப் போகிறார்களாம்.

நார்வே.—(Norway) யிலிருக்கும் ஜெர்மன் படைகளுக்கு தளவாடங்கள் ஸ்வீடனி(Sweden)ன் வழியாக வருவதாக புகார்.—ஸ்வீடன் அதை மறுக்கிறது.

டேன்மார்க்.—(Denmark) சர்வதேச சங்கத்திலிருந்து விலகிவிட்டது.

சீனா.—"பர்மா ரஸ்தாவை அடைத்தது, காலத்தை அனுசரித்து செய்ய வேண்டிய கார்யமாய் போயிற்று; சீனாவோடும், ஜப்பானோடும் சிநேகமாயிருப்பது தான் பிரிடனுடைய நோக்கம் என்றும், பிரிடனை காபந்து செய்யவேண்டிய இந்த ஸமயத்தில் மற்றொன்றையும் கவனிக்க முடியவில்லை;" யென்று பிரிடிஷ் பிரதம மந்திரி காமன்ஸ் ஸபையில் சொன்னார். ரஸ்தாவை மூடக்கூடாதென்று அமெரிக்கா (U. S. A.) ஆக்ஷேபித்திருக்கிறது. தனக்கு வேண்டிய ஸாமான்களை ரஷியாவிலிருந்து வாங்க சீன (Chungking) தேசிய கவர்ன்மெண்டு ஏற்பாடு செய்துவிட்டது.

ஜப்பான்.—ஜெர்மனி, இதாலி கக்ஷியோடு சேர்ந்துகொண்டு, அரசியலையும், அவைகளைப்போல் மாற்றிக்கொள்ள ஜப்பான் பார்க்கிறது. கிழ்ஆசியா(East Asia)வைக் கைப்பற்றிக்கொள்வது அதன் நோக்கமாகும்.

அமேரிக்கா.—ஐக்கிய நாடு(U. S. A.)களுக்கு அக்கிராசன (பிரஸிடெண்ட்)ராக Mr. ரூஸ்வெல்டை (Roosevelt) பொறுக்கியிருக்கிறார்கள். நியமனமானல், இந்தப் பதவி அவருக்கு மூன்றும் முறையாகும்.

21. அமெரிக்கக் குடியரசு நாடுகள் 21-ம் தேதி ஹவான (Havana)வில் கூடி, ஜெர்மனி பிடித்துக்கொண்ட ஐரோப்பிய நாடுகளுக்குச் சொந்தமாக அமெரிக்காவிலிருக்கும் தேசங்களைத் தங்கள் மேற்பார்வையில் வைத்துக்கொள்ளவும், ஐரோப்பிய யுத்தத்தினுல் விலைபோகாத தங்கள் சாமான்களை விற்க ஒரு சங்கத் (Cartel)தை ஏற்படுத்தவும் யோசனை செய்கின்றன.

கடற்சண்டை.—19-ம் தேதி மத்யதரைக் கடலில் இதாலியின் வேக யுத்தக் கப்பல்களிரண்டை ஆஸ்திரேலிய யுத்தக்கப்பல் ஸிட்னி (Sydney) எதிர்த்து, ஒன்றை—அதாவது, பார்டொலோமியோ காலினே (Bortolomeo Collino)வை மூழ்கடித்து, மற்றொன்றை விரட்ட, அது அதிவேகமாய் செல்லக்கூடியதால், தப்பிப்பிழைத்தது.

ஆகாய யுத்தம்.—3-பேர்களைக்கொல்ல, எதிரிக்கு 2-விமானங்கள் வீதம் சேதமாகின்றன. சமீபத்தில் 2-நாட்களில் எதிரிக்கு 28-விமானங்கள் போய் விட்டன; பிரிடன்மேல் படையெடுப்பு ஆரம்பித்ததிலிருந்து 200-விமானங்கள் சேதம்; சென்ற செப்டம்பர் மாதத்திலிருந்து இதுவரையில் நஷ்டம் 5,000 விமானங்களும், 10,000 விமான சாரதிகளும்.

இந்த வாரத்திய விமான யுத்த விவரம் கீழே காணலாம்:—

ஜூலை 16வ.—பிரிடிஷ் விமானங்கள் தாக்கிய ஊர்கள்:—லிஸியோ (Lisieux), எவரோ (Evreux), நார்டர்னி (Norderney), டிகாய் (Dekooy), விமான நிலயங்கள்; ஹானேவர் (Hanover) எண்ணெய் வடிகட்டும் சாலை, பார்டோ (Bardo) உலை; டார்ட்மெண்டு (Dortmund) வெடிமருந்துப்பட்டறை; வில்லெம்ஸஊர்டு(Willemsoord) துறைமுகம், ஆர்மென்டியர்ஸ் (Armentieres) கப்பற் கூட்டம்; காமுக் (Gamuk) துறைமுகம்—ஒரு விமானம் நஷ்டம்.

எதிரி பிரிடன் கடற்படையைத் தாக்கி, 3-விமானங்களை இழந்தான். பாலஸ்டைன் (Palestine) மீது முதலாக இதாலி விமானங்கள் வந்தன. மாண்டது 2-பேர்கள். எதிரிக்குச் சேதம் 3-விமானங்கள்.

ஜூலை 17வ.—பிரிடிஷ் விமானங்கள் தாக்கின இடங்கள்:—டோப்ருக் (Tobruk) துறைமுகம்; எல்குப்பி (El Gubbi) விமான நிலயம், அகோர்டாட் (Agordat), அஸ்ஸாப் (Assab) கடற்படை விடுதி—நஷ்டம் கிடையாது.

ஜெர்மனி—தென்கீழ், வடகீழ்க்கரைகளைத் தாக்கின. சேதம்—2-பெண்களும், 1-குழந்தையும்.

இதாலிய விமானங்கள், மால்டா (Malta)வைத் தாக்கின. பிரிடனுக்கு 1-விமானமும், இதாலிக்கு ஒரு விமானமும் நஷ்டம்.

ஜூலை 18௳—பிரிடிஷ் விமானங்கள் தாக்கியது:—ஹாலண்டு, பெல்ஜிய நாடுகளில் கப்பற்கூட்டங்கள், மெர்வில் (Marville) ஹெர்ட்ஸோகன் பாஷ் (Hertzogan Bosch) விமான நிலயங்கள், கெலோகிர்சன் (Geloenkirchen) எண்ணெய் ஆலை, கெண்ட் (Ghent), தென் அபிஸீனியா (S. Abyssinia) எண்ணெய்க் கிடங்குகள்.

இங்கிலாந்து வட கிழக்கு, தென் மேற்கிலும், ஸ்காட்லண்டு, வேல்ஸிலும் எதிரி விமானங்கள் வந்தன. நஷ்டம்—எதிரி விமானங்கள் 3; இறந்தது ஒரு ஆண், ஒரு பெண்.

ஜிப்ரால்டர் (Gibralter)-ம் இன்று எதிர்க்கப்பட்டது: நஷ்டமில்லை.

ஜூலை 19௳—பிரிடிஷ் விமானங்கள் எதிர்த்த இடங்கள்:—பகலில்—ராடர்டாம் (Rotterdam), பொலாயி (Boulogne) துறைமுகங்கள், ஹாவர் (Havre) பண்டசாலை, ஓமர் (Omer) விமான நிலையம்; நஷ்டம் 3 விமானங்கள்.

இரவில்.—எம்டன் (Emden), ஹார்லின்கன் (Harlingen), வில்லெம்ஸஹேர்டு துறைமுகங்கள், பிரெமென் (Bremen), டியபோல்ஸ் (Diepholz), பாடர்போர்ன் (Paderborn), ராடன்பர்க் (Roternburg) விமான உற்பத்திசாலைகள், பிரெமன் (Bremen), ஹானேவர் எண்ணெய்க் கிடங்கு; எஸ்ஸன் (Essen) வெடி மருந்துச்சாலை; ஹாம் (Hamm) பண்டசாலை.

ஸ்காட்லண்டு, வேல்ஸ், இங்கிலாந்து தென்கிழக்குக் கரைகள் தாக்கப்பட்டன; எதிரிக்கு நஷ்டம் 11 விமானங்கள்.

ஜூலை 20௳—பிரிடிஷ் விமானங்கள் தாக்கியது:—வீஸ்மார் (Wismar), பிரெமன் (Bremen), வென்ஸன்டார்ப் (Wenzendorf), கெலோன் கெர்சன் (Geloenkirchen) எண்ணெய்க் கிடங்குகள்; ரூர் (Ruhr) ரெயில்வே பாதைகள்; எம்டன் (Emden), ஹார்லிங்கன் (Harlingen) கப்பற்படை நிலயங்கள்; பிரெமன் (Bremen), டார்னியர் தொழிற்சாலைகள்; எல்குப்பி, டோப்ரூக், நெகலி (Neghelli), அகர்தாத், விமான நிலயங்கள்.

பிரிடிஷ் துணைக்கப்பல் ஒன்றையும், வியாபாரக்கப்பல் சிலவற்றையும் பிரிடிஷ் கால்வாயி (Channel)-ல் எதிரி எதிர்க்க முயன்றுன். பலன்படவில்லை. 100 விமானங்கள் கலந்தன. எதிரிக்கு நஷ்டம்—21 விமானங்கள்.

இதாலி மெர்ஸா மாத்ரூ (Mersa Matruh)வைத்தாக்கி ஒரு விமானத்தைத் தோற்றது.

ஜூலை 21உ—பிரிடிஷ் படையெடுப்பு:—டோப்ருக் (Tobruk) கடற் படை நிலயம்; எண்ணெய் டாங்க், கப்பல்கள்; ஜெர்மனி, பெல்ஜியம், ஹாலண்டிஉள்ள ராணுவகேந்திர ஸ்தா பனங்கள்.

வேல்ஸ்; தென் கிழ், வடகிழ், ஸ்காட்லண்டில் எதிரி விமானங்கள் தாக்கின—அதிக நஷ்டமில்லை—எதிரிக்குச் சேதம்—4 விமானங்கள்.

பிரிடனின் பாதுகாப்பு.—ஆகாயமார்க்கமாய்ச் சென்று வேவு பார்ப்பதால் எதிரிகள் செய்துவரும் ஏற்பாடுகளெல்லாம் என்னவென்று பிரிடனுக்கு இப்பொழுது தெரியும். அதற்குத்தகுந்தபடி பின்வருமாறு பிரிடனில் பாது காப்பு செய்யப்பட்டிருக்கிறது:—

பிரதம மந்திரி வாக்களித்தபடி, வெகு விரைவாய், ஒவ்வொரு கிராமமும், ஊரும், நகரமும் பாதுகாப்புக் காரியங்களைச் செய்துவிட்டது. கடற்கரைகளில் காவற்காரர்களும், சாரணர்களும் தயாராக நிற்கிறுர்கள்.

எதிரியை தடுக்க கடற்படையும், விமானப்படையும் நிற்கின்றன. மூடுபனியும் நமக்கு உதவி செய்யும். இவைகளை மீறி வந்தால், நிலப்படைகளிருக்கின்றன. அவர்களில், கடைசிவீரன் மாளும் வரையில் சண்டை நிற்காது.

இதைத்தாண்டினல், ஒவ்வொரு இடத்திலும், பீரங்கிப்படையும், காலாள் படையும் நிற்கின்றன.

நெபோலியனை (Napoleon)த் தோற்கடிக்க கட்டிய கோட்டைகளை (Martells towers)ப் போல் சிறு அரண்கள் (Pill-boxes) ஒவ்வொரு இடத்திலும் கட்டப் பட்டிருக்கின்றன.

எதிரியோடு போர் செய்ய பிரிடிஷ் கடற்படை ஆவலோடு எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறது. ஜெர்மன் விமானப்படை எண்ணிக்கையில் பெரிதென்று தெரிந்தும், பிரிடிஷ் விமானப்படைதான் பராக்கிரமத்தில் மேலென்றும், ஜெயிக்க முடியுமென்ற தைரியத்துடன் தயாராக நிற்கிறது.

REVISED PROGRAMME

OF THE

Pudukkottai War Information Bureau.

1940—

July	27, Saturday ...	Town Hall ...	6.30 p. m.	Lecture III.
	28, Sunday ...	College ...	10.35 a. m.	„
		Rani's School ...	10.35 a. m.	„
		Alangudi ...	4.30 p. m.	„
		Tirumayyam ...	4.30 p. m.	„
	29, Monday ...	Keeranur ...	5.00 p. m.	„
	30, Tuesday ...	C. S. M. School ...	10.00 a. m.	„
		Ramachandrapuram ...	4.45 p. m.	General.
	31, Wednesday..	Karambakkudi ...	6.00 p. m.	„
August	1, Thursday ...	Viralimalai ...	5.00 p. m.	„
	2, Friday ...	Town Hall ...	5.00 p. m.	Lecture IV.
	3, Saturday ...	Nachandupatti ...	4.30 p. m.	General.
		Ponnamaravathi ...	5.00 p. m.	„
	4, Sunday ...	College ...	10.35 a. m.	Lecture IV.
		Rani's School ...	10.35 a. m.	„
		Tirumayyam ...	4.30 p. m.	„
		Alangudi ...	4.30 p. m.	„
	5, Monday ...	Keeranur ...	5.00 p. m.	„
		Andakkulam ...	9.00 a. m.	General.
	6, Tuesday ...	C. S. M. School ...	10.00 a. m.	Lecture IV.
		Rayavaram ...	4.30 p. m.	„
		Annavasal ...	4.30 p. m.	„
	8, Thursday ...	Teachers' Association, Town.	3.30 p. m.	

Sri Brihadamba State Press, Pudukkottai. 2,850—27-7-40.